## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்

**முன்னிலை : திரு.S.தினேஷ்குமார், B.A., B.L.,**
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2026−ம் ஆண்டு ஜுலை மாதம் 07−ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 60/2026**

**(CNR No. TNNM02−000440−2026)**

தமிழக அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளார்,
வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம்,
நாமக்கல் மாவட்டம்.
குற்ற எண்.169/2025. − குற்றமுறையீட்டாளர்

// எதிராக //

பழனிசாமி,
த.பெ.வையாபுரி,
5/70, கொண்டன்காட்டுர்,
கூத்தம்பூண்டி,
பரமத்திவேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம். − எதிரி

| நிகழ்வு | முறையீடு | கைதுஅல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணை தொடக்கம் | விசாரணை முடிவு | தீர்ப்பு | தாமத்திற் கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 11.12.2025 | 13.12.2025 | 31.12.2025 | 31.12.2025 | 19.05.2026 | 15.06.2026 | விடுதலை | −− |

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C. No.814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்றம் காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | −− |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 18.02.2026 |

| | | |
|---|---|---|
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்க மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | -- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 17.04.2026 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | ---- |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 19.05.2026 | 19.05.2026 |
| அ.சா.2 | 19.05.2026 | 19.05.2026 |
| அ.சா.3 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.4 | 11.06.2026 | 11.06.2026 |
| அ.சா.5 | 15.06.2026 | 15.06.2026 |
| அ.சா.6 | 15.06.2026 | 15.06.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 17.06.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்டநாள் | ---- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கானது கடந்த 18.02.2026–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 04.07.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர்

நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.A.நல்லசிவம்** அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீ ர் ப் பு ரை**

இவ்வழக்கானது எதிரியின் மீது சட்டப் பிரிவுகள் 296(b), 351(2) BNSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதியறிக்கையின் படி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

**(1.1)** கடந்த 11.12.2025–ம் தேதி காலை 09.00 மணிக்கு மாணிக்கம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நிகழ்நிலை புகார்தாரரான நித்யாவும், அவரது கணவரான பூபதிராஜாவும் தங்களுடைய மகனை பள்ளியில் விட்டுவிட்டு வேலைக்கு செல்ல வண்டியை எடுத்தபோது அதே ஊரைச்சேர்ந்த எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா பையா நீயெல்லாம் நல்லவே இருக்க மாட்டடா என்று தகாத வார்த்தையால் திட்டியும், நிகழ்நிலை புகார்தாரரின் நிலத்தை, அவரிடமிருந்து ஏமாற்றி வாங்கிட்டீங்களா அவரையும், அவரது மனைவியையும் இரண்டு நாளில் தீர்த்து கட்டர பாருடா என்று கொலைமிரட்டல் விடுத்தும், அவரது மனைவியான நித்யா எதிரியிடம் ஏங்க இப்படி பொது இடத்தில் பிரச்சனை பண்றீங்க என்று கேட்டதற்கு நீ வாய திறக்காதடி முண்ட நீதாண்டி எல்லா பிரச்சனைக்கும் காரணம் உங்கள சும்மா விடமாட்டண்டி உன்ன என்ன பண்றனு மட்டும் பாருங்க உங்களுக்கு இரண்டு நாள் டைம் ஒழுங்கா வீட்டை என் பெயருக்கு மாத்தி எழுதி வச்சிருங்க இல்லைன்னா வீட்டுல குடியிருக்க நீங்க இரண்டு பேரும் உயிரோடு இருக்க மாட்டீங்க என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 296(b), 351(2) BNSகீழ் வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(1.2)** குற்ற இறுதியறிக்கை பரிசீலனைக்குப்பின் மேற்படி வழக்கு எண்ணில் எதிரிக்கு எதிராக 18.02.2026 இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. அழைப்பாணையை பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு குற்ற இறுதியறிக்கை மற்றும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் சட்டப் பிரிவு 230BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**(1.3)** எதிரிக்கு போதிய காலஅவகாசம் வழங்கிய பின்பு இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரிக்கு எதிராக 296(b), 351(2) BNS ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு புரியும் படி தமிழ்மொழியில் குற்றச்சாட்டுகள் விளக்கி கூறி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினார்.

**3.** இவ்வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. ஆனால் எ.ம.சா.1 ஆன சான்றாவணம் மட்டும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் சான்றாவணங்களிலிருந்தும் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

**(4.1)** இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் – அ.சா.1 மற்றும் அவரின் கணவரான அ.சா.2 முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து கூறும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, அ.சா.1ன் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆகவும், அ.சா.3 மற்றும் அ.சா.5 சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு வந்து பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யும்போது உடனிருந்து அதில் சாட்சியாக தானும், பட்டியல் சாட்சி–6 ஆன கார்த்தி என்பவரும் கையொப்பம் செய்தது பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. எதிரியை சட்டப் பிரிவு 351 (1)(ஆ)BNSS பிரிவின் கீழ் வினவுதல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் சட்டப் பிரிவு 351 (1) (ஆ)BNSS_பிரிவின் கீழ் வினவிய போது அவற்றை எதிரி பொய்சாட்சி என்று கூறியதோடு தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார்.

**6. ஆய்வுக்குரிய பிரச்சனை:–**

**(6.1)** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 296(b), 351(2) BNSன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

**7. தீர்வு:**

**7.1** கடந்த 11.12.2025–ம் தேதி காலை 09.00 மணிக்கு மாணிக்கம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நிகழ்நிலை புகார்தாரரான நித்யாவும், அவரது கணவரான பூபதிராஜாவும் தங்களுடைய மகனை பள்ளியில் விட்டுவிட்டு வேலைக்கு செல்ல வண்டியை எடுத்தபோது அதே ஊரைச்சேர்ந்த எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா பையா நீயெல்லாம் நல்லவே இருக்க மாட்டடா என்று தகாத வார்த்தையால் திட்டியும், நிகழ்நிலை புகார்தாரரின் நிலத்தை, அவரிடமிருந்து ஏமாற்றி வாங்கிட்டீங்களா அவரையும், அவரது மனைவியையும் இரண்டு நாளில் தீர்த்து கட்டர பாருடா என்று

கொலைமிரட்டல் விடுத்தும், அவரது மனைவியான நித்யா எதிரியிடம் ஏங்க இப்படி பொது இடத்தில் பிரச்சனை பண்றீங்க என்று கேட்டதற்கு நீ வாய திறக்காதடி முண்ட நீதாண்டி எல்லா பிரச்சனைக்கும் காரணம் உங்கள சும்மா விடமாட்டண்டி உன்ன என்ன பண்றனு மட்டும் பாருங்க உங்களுக்கு இரண்டு நாள் டைம் ஒழுங்கா வீட்டை என் பெயருக்கு மாத்தி எழுதி வச்சிருங்க இல்லைன்னா வீட்டுல குடியிருக்க நீங்க இரண்டு பேரும் உயிரோடு இருக்க மாட்டீங்க என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்ற சங்கதிகளை நிரூபிக்கும் சுமை அரசு தரப்பிற்கு உள்ளது.

**7.2** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 மற்றும் அவரது கணவர் அ.சா.2, மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**7.3.** இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் தானும், தனது கணவரான அ.சா.2ம் தனது மகளை அவர் படித்து வரும் மாணிக்கம்பாளையம் அரசு பள்ளிக்கு அழைத்து சென்று விட்டுவிட்டு பின்னர் தனது கணவர் இருசக்கர வாகனத்தை எடுக்க முற்பட்டபோது எதிரி தங்கள் வண்டியை மறித்து தனது கணவரை தேவடியா பயலே, உருப்படமாட்ட என்று கேட்டதாகவும், தான் அப்போது ஏன் இவ்வாறு கெட்ட வார்த்தை பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, நீ வாய மூடுடி, தேவடியா உன்னாலதாண்டி எல்லா பிரச்சனையும் என்று என்னையும் கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், இரண்டு நாள் தான் உங்களுக்கு டைம் அதற்குள் உங்கள் வீட்டை தனது பெயரில் எழுதிவைக்கவில்லை என்றால் உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், பின்னர் தாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் மேற்படி தங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டதாகவும், பின்னர் 13.12.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

சம்பவத்தில்பாதிக்கப்பட்ட விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1யை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்.

**7.4.** இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது முன் விசாரணை சாட்சியத்தில் கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் தான் தனது அம்மாவை பார்க்க மாணிக்கம்பாளையம் சென்று கொண்டிருந்தபோது, மாணிக்கம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு அருகில் பூபதி ராஜா அவரது மனைவி நித்யா, ஆஜர் எதிரி பழனிசாமி ஆகியோர் வாய்சண்டை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், சிறிது நேரம் அவ்வாறு சண்டைக்கு பிறகு கிளம்பி சென்றுவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**7.5** இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.5 தனது முன் விசாரணை சாட்சியத்தில் கடந்த 11.12.2025 ம் தேதி சுமார் 09.00 – 09.15 மணியளவில் ஆஜர் எதிரிக்கும், அ.சா.2 பூபதி ராஜாவிற்கும் மாணிக்கம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளி முன்பு சண்டை நடந்து கொண்டிருந்ததாகவும், தனது பணியை முடித்துவிட்டு லாரியில் வந்து கொண்டிருந்தபோது சம்பவத்தை பார்த்ததாகவும், ஆஜர் எதிரி பூபதிராஜாவை கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார் என்றும், நாளைக்குள் வீட்டை காலி செய்ய வில்லை என்றால் பூபதிராஜாவையும், சம்பவயிடத்தில் இருந்த அவரது மனைவியையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார் என்றும், பின்னர் தான் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**8.1.** முதலில் எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 296(b)BNS ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் மேற்கண்டவாறு எதிரி தங்களை கெட்ட வார்த்தையால் திட்டியதாக சாட்சியமளித்திருந்தாலும், அது தங்களுக்கு அவமானமாக இருந்ததாக எதுவும் சொல்லவில்லை.

**8.2.** மேலும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் தான் தனது அம்மாவை பார்க்க மாணிக்கம்பாளையம் சென்று கொண்டிருந்தபோது, மாணிக்கம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு அருகில் அ.சா.1 மற்றும் அ.சா.2 மற்றும் எதிரி பழனிசாமி ஆகியோர் வாய்சண்டை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், சிறிது நேரம் அவ்வாறு சண்டைக்கு பிறகு கிளம்பி சென்றுவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2025 ம் தேதி சுமார் 09.00 – 09.15 மணியளவில் எதிரிக்கும், அ.சா.2 பூபதி ராஜாவிற்கும் மாணிக்கம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளி முன்பு சண்டை நடந்து கொண்டிருந்ததாகவும், தனது பணியை முடித்துவிட்டு லாரியில் வந்து கொண்டிருந்தபோது சம்பவத்தை பார்த்ததாகவும், எதிரி அ.சா.2யை கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார் என்றும், நாளைக்குள் வீட்டை காலி செய்ய வில்லை என்றால் பூபதிராஜாவையும், சம்பவயிடத்தில் இருந்த அவரது மனைவியையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார் என்றும், பின்னர் தான் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், மேற்படி அ.சா.5 தனது சாட்சியத்தில் எதிரி அ.சா.2யை என்ன கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார் என்று எதுவும் குறிப்பிடவில்லை. அவ்வாறு எதிரி அ.சா.2யை கெட்ட வார்த்தை சொல்லி திட்டியது தனக்கு அறுவறுப்பாக இருந்தது என்றோ எதுவும் சொல்லவில்லை. ஆகவே மேற்படி பொருண்மைகளிலிருந்து எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 296(b)–BNSன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**9.1** இரண்டாவதாக எதிரிக்கு எதிரான பிரிவு 351(2) BNSன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து பரிசீலித்து பார்க்கையில், அரசு தரப்பு வழக்கில் அ.சா.1, அ.சா.2யை பார்த்து எதிரி உங்களுக்கு இரண்டு நாள் டைம் ஒழுங்கா வீட்டை

என் பெயருக்கு மாத்தி எழுதி வச்சிருங்க, இல்லைன்னா வீட்டுல குடியிருக்க நீங்க இரண்டு பேரும் உயிரோடு இருக்க மாட்டீங்க என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கண்டுள்ளது.

**9.2.** அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தங்களை பார்த்து இரண்டு நாள் தான் உங்களுக்கு டைம், அதற்குள் உங்கள் வீட்டை தனது பெயரில் எழுதி வைக்கவில்லை என்றால் உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், பின்னர் தாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் மேற்படி தங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டதாகவும், பின்னர் 13.12.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தங்களை பார்த்து இன்னும் இரண்டு நாட்களுக்குள் உங்கள் வீட்டை எழுதிவைக்கவில்லை என்றால் ஆட்களை வைத்து உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், பின்னர் தாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் தங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டதாகவும், பின்னர் தனது மனைவி 13.12.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில் எதிரி அ.சா.2யை கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்ததாகவும், நாளைக்குள் வீட்டை காலி செய்ய வில்லை என்றால் அ.சா.1, அ.சா.2யை கொன்றுவிடுவதாக மிரட்டினார் என்றும், பின்னர் தான் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், மேற்கண்டவாறு எதிரி அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் தங்களது சாட்சித்தில் எதிரி அ.சா.ச1, அ.சா.2 சாட்சிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்தாக அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 சாட்சிகள் சாட்சியமளித்திருந்தாலும், அது அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தியது என்றவாறு எதுவும் சொல்லவில்லை. மேலும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில்

எதிரி அ.சா.1, அ.,சா.2ற்கு கொலை மிரட்டல் விடுத்ததாக எதுவும் சொல்லவில்லை.

**9.3.** மேலும், அ.சா.1, அ.சா.2 சாட்சிகளும், தங்களது சாட்சியத்தில் சம்பகவத்திற்கு பின்னர் தாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் மேற்படி தங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டதாகவும், பின்னர் 13.12.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி பொருண்மையை பரிசீலித்து பார்க்கையில், அதாவது சம்பவத்திற்கு பிறகு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாதாரணமாக சம்பவயிடத்திலிருந்து தங்களது இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார்கள் என்பது தெரியவருகிறது. ஆகேவ, அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்கில் சொல்லப்பட்டிருந்தாலும், அது அ.சா.1, அ.சா.2 சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்தியது என்றவாறு இல்லை என்பது புரியவருகிறது. ஆகவே மேற்படி பொருண்மைகளிலிருந்து எதிரிக்கு எதிரான சட்டப் பிரிவு 296(b)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**10.1** மேலும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 சம்பவயிடத்தில் போலீசார் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேலும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6– காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததது முதல், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரிக்கு எதிராக குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்ததது பற்றி சாட்சியமளித்துள்ளார். ஆனால், மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா.6 சாட்சிகளின் சாட்சியமானது எதிரிக்கு எதிரான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.2.** ஆகவே, கடந்த 11.12.2025–ம் தேதி காலை 09.00 மணிக்கு மாணிக்கம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நிகழ்நிலை புகார்தாரரான நித்யாவும், அவரது கணவரான பூபதிராஜாவும் தங்களுடைய மகனை பள்ளியில் விட்டுவிட்டு வேலைக்கு செல்ல வண்டியை எடுத்தபோது அதே ஊரைச்சேர்ந்த எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா பையா நீயெல்லாம் நல்லவே இருக்க மாட்டடா என்று தகாத வார்த்தையால் திட்டியும், நிகழ்நிலை புகார்தாரரின் நிலத்தை, அவரிடமிருந்து ஏமாற்றி வாங்கிட்டீங்களா அவரையும், அவரது மனைவியையும் இரண்டு நாளில் தீர்த்து கட்டர பாருடா என்று கொலைமிரட்டல் விடுத்தும், அவரது மனைவியான நித்யா எதிரியிடம் ஏங்க இப்படி பொது இடத்தில் பிரச்சனை பண்றீங்க என்று கேட்டதற்கு நீ வாய திறக்காதடி முண்ட நீதாண்டி எல்லா பிரச்சனைக்கும் காரணம் உங்கள சும்மா விடமாட்டண்டி உன்ன என்ன பண்றனு மட்டும் பாருங்க உங்களுக்கு இரண்டு நாள் டைம் ஒழுங்கா வீட்டை என் பெயருக்கு மாத்தி எழுதி வச்சிருங்க இல்லைன்னா வீட்டுல குடியிருக்க நீங்க இரண்டு பேரும் உயிரோடு இருக்க மாட்டீங்க என்று கொலை மிரட்டல் விடுத்தும் உள்ளார் என்று எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 351(2)BNS கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.** இறுதியாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 351(2)BNS ன் கீழ் எதிரிக்கு எதிரான குற்றசாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை சட்டப் பிரிவு 271(1)BNSSன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் இரத்து செய்தும் உத்தரவிடப்படுகிறது.

**12.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 07 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESHKUMAR SUBRAMANI
Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.07 06:14:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**அட்டவணை :**

**அரசுத்தரப்பு சாட்சிகள் :**

| **சாட்சியின் வரிசை** | **சாட்சியின் பெயர்** | **எவ்வகையான சாட்சி** |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.நித்யா | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.பூபதிராஜா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.பிரேம்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.ரமேஷ்பாபு | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு.நல்லதம்பி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | திருமதி.சந்தியா | புலன் விசாரணை அதிகாரி |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :**

| **சான்றாவணங்களின் வரிசை** | **நாள்** | **சான்றாவணங்களின் விபரம்** | **குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விவரம்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.12.2025 | புகார் | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.2 | --- | பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | 13.12.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | --- | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | --- | மாதிரி வரைபடம் | அ.சா.6 |

**எதிரி தரப்பு சாட்சி** : இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்**

| | |
|---|---|
| **எ.ம.சா.ஆ.1** | புகார்தாரர் தரப்பினருக்கு எதிராக குற்ற எண்.168/2025 சட்டப் பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை. |

**அரசுத்தரப்பு சான்றுப்பொருள்** : இல்லை.

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.07 06:14:50 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**குறிப்பு**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**நகல்**

1) மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.